ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2457/08 - 2025 ඔක්තෝබර් මස 09 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.10.09

2457/08 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ் விபரிக்கப்படும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப் படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரகமகே தொன் லால் காந்த ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில் கொலொன்னாவை பிரதேச செயலாளர் பிரிவின் இல. 502C - ராஜசிங்ஹகம கிராம அலுவலர் பிரிவில், தலாஹேன(கொலொன்னாவ நகரசபை எல்லையினுள்) கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2022.12.21 ஆம் திகதி மற்றும் இலக்கம். CO/KLN/2022/477 கொண்ட முன்னேற்ற சுவட்டு வரைபடத்தில் விபரமாக குறிப்பிடப்பட்ட கீழ்வரும் பெயர் களையும் விஸ்தீரணங்களையும் கொண்ட கீழ்வரும் காணித் துண்டுகளின் எல்லைகள் :

01. துண்டு “A” - வெவேகும்புர - விஸ்தீரணம்: சுமார் 0.0042 ஹெக்டயார்

வடக்கு : நகர அபிவிருத்தி அதிகாரசபை உரிமை கோரும் வெவேகும்புர; கிழக்கு : நகர அபிவிருத்தி அதிகாரசபை உரிமைகோரும் மற்றும் உரிமை கோரும் கண்டுபிடிக்கப்படாத வெவேகும்புர; தெற்கு : உரிமை கோருநர் கண்டுபிடிக்கப்படாத வெவேகும்புர ஹலபராவ பாதையின் வரி மதிப்பீட்டு இலக்கம் கண்டுபிடிக்கப்படாத ஐ.சீ.சீ தனியார் நிறுவனம் உரிமை கோரும் காணி மற்றும் துண்டு B; மேற்கு : துண்டு B.

02. **துண்டு “B” - ஹல்கஹவத்தை - விஸ்தீரணம்: சுமார் 0.0594 ஹெக்டயார்**

வடக்கு : உரிமையாளர் கண்டுபிடிக்கப்படாத தலகஹ வத்தை, நகர அபிவிருத்தி அதிகாரசபை உரிமைகோரும் ஹல்பராவ வெவேகும்புர மற்றும் துண்டு A; கிழக்கு : நகர அபிவிருத்தி அதிகாரசபை உரிமைகோரும் ஹல்பராவ வெவேகும்புர, துண்டு A மற்றும் ஹல்பராவ பாதையின் வரி மதிப்பீட்டு இலக்கம் கண்டுபிடிக்கப்படாத ஐ.சீ.சீ தனியார் நிறுவனம் உரிமை கோரும் காணி; தெற்கு : ஹல்பராவ பாதையின் வரி மதிப்பீட்டு இலக்கம் கண்டுபிடிக்கப்படாத

ஐ. சீ. சீ தனியார் நிறுவனம் உரிமை கோரும் காணி மற்றும் துண்டு C; மேற்கு : துண்டு C, ஹலபராவ பாதையின் வரி மதிப்பீட்டு இலக்கம் 484 2/1 கொண்ட காணி மற்றும் உரிமையாளர் கண்டுபிடிக்கப்படாத ஹல்பராவ வத்தை.

**03. துண்டு “C” - வரிமதிப்பீட்டு இல. 484/2/1 ஹல்பராவ பாதை - விஸ்தீரணம்: 0.0641 ஹெக்டயார்**

வடக்கு : ஹல்பராவ பாதையின் வரிமதிப்பீட்டு இலக்கம் 484 2/ 1 கொண்ட காணி, உரிமையாளர் கண்டுபிடிக்கப்படாத ஹல்பராவ வத்தை மற்றும் துண்டு B; கிழக்கு : துண்டு B மற்றும் ஹல்பராவ பாதையின் வரிமதிப்பீட்டு இலக்கம் கண்டுபிடிக்கப்படாத ஐ. சீ. சீ தனியார் நிறுவனம் உரிமை கோரும் காணி; தெற்கு : ஹல்பராவ பாதையின் வரி மதிப்பீட்டு இலக்கம் கண்டுபிடிக்கப்படாத ஐ. சீ. சீ தனியார் நிறுவனம் உரிமை கோரும் காணி, வீதி மற்றும் ஹல்பராவ பாதையின் வரிமதிப்பீட்டு இலக்கம் கண்டுபிடிக்கப்படாத நகர அபிவிருத்தி அதிகாரசபை உரிமைகோரும் காணி; மேற்கு : வீதி, ஹல்பராவ பாதையின் வரிமதிப்பீட்டு இலக்கம் கண்டுபிடிக்கப்படாத நகர அபிவிருத்தி அதிகாரசபை உரிமை கோரும் காணி மற்றும் வரிமதிப்பீட்டு இலக்கம் 484 2/1 கொண்ட காணி.

கே.டி.லால் காந்த,
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி
மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

எனது இல.: 4-3/14/2022/UDA/21
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு,
‘‘மிஹிகத்த மெதுர’’,
இல. 1200/6, காணிச் செயலகம்,
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2025 யூலை, 24.

EOG 10 - 0084

## திருத்தம்

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

### 5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

எனது இல.: 03J/78/E/206
பிரதேச செயலாளர் குறிப்பு இல. : YAK/LAN/01/03/17

1986.03.27 ஆம் திகதிய 394/11 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் 1A பக்கத்தில் மும்மொழிகளில் பிரசுரிக்கப்பட்ட காணி எடுத்தற் சட்டம் 5 ஆம் பிரிவின் படி “நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட ග/අ78/61 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள சுமார் 1 ஏக்கர், 00 றூட், 00 பேர்ச் விஸ்தீரணத்தைக் கொண்ட பின்வரும் எல்லையினுள் அமைந்துள்ள துண்டு ‘அ’ உடைய கிட்டிவலகலவத்தை அல்லது கிட்டிகலஹேன எனும் காணித் துண்டு” என்பதற்கு பதிலாக “நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட ග/අ78/61 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள சுமார் 1 ஏக்கர், 00 றூட், 00 பேர்ச் விஸ்தீரணத்தைக் கொண்ட பின்வரும் எல்லையினுள் அமைந்துள்ள துண்டு ‘அ’ உடைய கலுவலகலவத்தை அல்லது கலுகலஹேன எனும் காணித் துண்டு” எனவும் இத்தால் திருத்தப்படுகிறது என்பதை அறியத்தருகிறேன்.

கே.டி.லால் காந்த,
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி
மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு,
‘‘மிஹிகத்த மெதுர’’,
இல. 1200/6, காணிச் செயலகம்,
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2025 செத்தெம்பர், 26.

EOG 10 - 0085

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.